# ஆமையும் குரங்கும் வாழை நட்ட கதை

TAM206A

(ஆதாரம்: கதை- சுஜா சூசன் ஜார்ஜ், தமிழில்- உதயசங்கர், பாரதி புத்தகாலயம்)

**ஆசிரியருக்கான குறிப்புகள்:**

- ஆமையும் குரங்கும் வாழை நட்ட கதையைப் படங்களாகக் காட்டப் போவதாகக் குழந்தைகளிடம் கூறவும்.
- என்ன மாதிரியான கதை? யார் யார் கதையில் வருவார்கள்? என்று குழந்தைகளை யூகிக்க வைக்கவும்.
- ஒவ்வொரு படங்களையும் காட்டும் பொழுது கதையில் என்ன நடக்கிறது, அடுத்து என்ன நடக்கும், கதையின் முடிவு என்னவாக இருக்கும் என்பனவற்றைச் சொல்லுமாறு குழந்தைகளைத் தயார் செய்யவும்.
- ஒவ்வொரு படமாகக் குழந்தைகளிடம் காட்டி, படத்தின் பின்னுள்ள கேள்விகளைக் கேட்கவும்.
- குழந்தைகளின் பதில்களை, அவர்களிடம் கலந்தாலோசித்துப் பின் அவர்கள் கூறியவாறு, அவர்களின் மொழியிலேயே கரும்பலகையில் எழுதவும்.

## I. படம் பார்த்துக் கதை உருவாக்குதல்:

| | | | |
|---|---|---|---|
| 1 |  படக்கதையின் முன்பக்கத்தைக் காட்டிக் குழந்தைகளிடம் கேள்வி கேட்டு அவர்களின் மனவோட்டங்களைக் கேட்கவும். | 7 |  குரங்கும் ஆமையும் என்ன செய்கின்றனர்?<br>வாழைக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கின்றனர். |
| 2 |  படத்தில் என்னென்ன விலங்குகள் இருக்கின்றன? விலங்குகள் எந்த இடத்தில் இருக்கின்றன?<br>ஆற்றங்கரையில் ஒரு குரங்கும் ஆமையும் வாழ்ந்து வந்தன | 8 |  குரங்கின் மரமும் ஆமையின் மரமும் என்னவானது? வாடிய வாழையைப் பார்த்த குரங்குக்கு எப்படி இருக்கும்?<br>குரங்கின் மேற்பகுதி வாழை காய்ந்து போனது. ஆமையின் அடிப்பகுதி வாழை நன்கு வளர்ந்தது. குரங்கு கவலையுடனும் ஆமை மகிழ்ச்சியாகவும் இருந்தன. |
| 3 |  ஆற்றில் எது மிதந்து வருகிறது?<br>ஒருமுறை ஆற்றில் ஒரு வாழை மரம் மிதந்து வந்தது. | 9 |  யாருடைய வாழை மரம் பழுத்து இருக்கிறது? வாழைப்பழத்தைத் தின்ன யார் யாரெல்லாம் பகலில் விருந்தினராக வந்தனர்?<br>ஆமையின் வாழை மரம் வளர்ந்து பழம் பழுத்தது. அணில்களும், தேனீக்களும், காகங்களும் வாழைப்பழத்தைத் தின்ன பகலில் விருந்தினராக வந்தனர். |
| 4 |  குரங்கும் ஆமையும் என்ன செய்கின்றன?<br>குரங்கும் ஆமையும் சேர்ந்து வாழை மரத்தைக் கரைக்குக் கொண்டு வந்தன. | 10 |  வாழைப்பழத்தைத் தின்ன யார் யாரெல்லாம் இரவில் விருந்தினராக வந்தனர்? வாழைப்பழத்தைப் பார்த்த குரங்கிற்கு எப்படி இருக்கும்?<br>வவ்வால்களும் ஆந்தையும் இரவில் வாழைப்பழத்தைச் சாப்பிட வந்தன. குரங்கு வருத்தப்பட்டது. |
| 5 |  குரங்கும் ஆமையும் கனவில் எதைக் கற்பனை செய்து பார்க்கின்றனர்?<br>குரங்கும் ஆமையும் வாழை மரம் வைக்க ஆசைப்பட்டன. | 11 |  ஆமை வாழைக்குலையை வெட்ட யாரிடம் உதவி கேட்கும்?<br>ஆமை தன்னுடைய வாழைக்குலையை வெட்ட குரங்கிடம் உதவி கேட்டது. இருவரும் சேர்ந்து வாழைக்குலையை வெட்டினர். |
| 6 |  வாழை மரத்தை குரங்கும் ஆமையும் எவ்வாறு பங்கு போட்டுக்கொண்டன?<br>வாழை மரத்தின் மேல்பாகத்தை அடம்பிடித்து குரங்கு எடுத்துக்கொண்டது. வாழை மரத்தின் கீழ் பாகத்தை ஆமை எடுத்துக்கொண்டது. | 12 |  ஆமை வாழைப்பழங்களை என்னசெய்தது?<br>ஆமை வாழைப்பழங்களைக் கரடி, முயல், பன்றி, மான் மற்றும் கிளி போன்ற நண்பர்களுக்குக் கொடுத்தது. குரங்கும் ஆமையும் மீதி பழங்களைப் பிரித்துக்கொண்டன. |

## II. கதையை வாசித்தல்:



கதைப்படங்களைக் காட்டி, ஆசிரியர் மாணவர்களோடு சேர்ந்து கதையை உருவாக்குதல்



அனைத்து மாணவர்களும் உரையாடி, முடிவுசெய்யும் கதைவரிகளைக் கரும்பலகையில் எழுதுதல்



ஆசிரியர் கதைப்புத்தகத்தை மாணவர்களுக்காக வாசித்தல்



மாணவர்கள் தங்கள் உருவாக்கிய கதையையும் புத்தகக் கதையையும் ஒப்பிட்டுத் திருத்தம் செய்தல்



மாணவர்கள் இருவர் இருவராக அமர்ந்து கதைகயை வாசித்தல்

## III. கதையின் கருவைக் கலந்துரையாடல்:

1. கதையில் குரங்கின் செயல்பாட்டைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன?
2. கதையில் ஆமையின் செயல்பாட்டைப் பற்றி உன்னுடைய கருத்து என்ன?

## IV. தொடர் செயல்பாடுகள்:

1. ஒவ்வொரு மாணவரும் ஒரு கதைப்படத்தைத் தேர்வு செய்து அதை வரைந்து அதற்கான கதைக்குறிப்பை எழுதலாம். குழந்தைகள் கதைக்குறிப்பை அவர்களுடைய மொழியிலோ அல்லது கதைப்படத்தில் இருந்தோ எடுத்து எழுத சுதந்திரம் தரப்பட வேண்டும். அனைவரின் படங்களும் கதை வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்டு ஒரு நூலாகத் தொகுக்கப்பட வேண்டும்.
2. மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு பிரிவினரை குரங்கின் மனவோட்டங்களையும் மற்றொரு பிரிவினரை ஆமையின் எண்ண ஓட்டங்களையும் எழுதச் செய்யவும்.
3. தனியாள் செயல்பாடு: குரங்கிற்கு கீழ் பாகமும் ஆமைக்கு மேல் பாகமும் கிடைத்திருந்தால் கதையின் போக்கும் முடிவும் என்னவாக இருந்திருக்கும் என்று மாணவரை எழுதச் செய்யவும்.
4. மாணவர்களை 5 அல்லது 6 நபர்களாகப் பிரித்து, ஆமையும் குரங்கும் வாழை நட்ட கதையை எழுதி, கதாபாத்திரங்களை ஏற்று நாடகமாக நடிக்கச் செய்யவும்.